# தொல்காப்பியம்- எழுத்ததிகாரம்

தொல்காப்பியம் தமிழில் கிடைத்த முதல் நூலாகும்.இது எழுத்து, சொல் ,பொருள் என்னும் மூன்று அதிகாரங்களை உடையது. இதில் முதலாவது அதிகாரம் எழுத்ததிகாரமாகும்.இது ஒன்பதுது பிரிவுகளை உடையது.

1.நூல்மரபு.

2.மொழிமரபு.

3.பிறப்பியல்.

4.புணரியல்.

5.தொகைமரபு.

6.உருபியல்.

7.உயிர்மயங்கியல்.

8.புள்ளி மயங்கியல்.

9.குற்றியலுகரப் புணரியல்.என்னும் 9இயல்களை உடையது.

1.நூன் மரபு:

முதலெழுத்துக்கள் 30வகை அவை அ முதல் ன வரையுள்ள உயிர் மற்றும் மெய் எழுத்துக்களாகும்.மேலும் சார்ந்து வருகின்ற மரபில் சார்பெழுத்துக்கள் மூவகைப்படும் (நூ-2)என்பார் தொல்காப்பியர்.

அவை1.குற்றியலுகரம்

2.குற்றியலிகரம்

3.ஆய்தம்

உயிர் எழுத்துக்கள் அ முதல் ஔ வரை 12என்பர்.(நூ-1)அவற்றுள் அ இ உ எ ஒ இவை ஒரு மாத்திரை அளவு உடைய குறில் எழுத்துக்கள் ஆகும்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ ஆகிய எழுத்துக்கள் இரண்டு மாத்திரை அளவு உடைய நெடில் எழுத்துக்கள் எனப்படும்.

மெய் எழுத்துக்கள் க் முதல் ன்வரையுள்ள 18 ஆகும்.

இவ் எழுத்துக்களுக்கு 1/2 மாத்திரை அளவு பெறும். இவை மூன்று வகைப்படும்.வல்லினம், மெல்லினம், இடையினம் எனப்படும்.

க ச ட த ப ற என்னும் ஆறும் வல்லினம்.ங ஞ ண ந ம ன ஆறும் மெல்லினம்.ய ர ல வ ழ ள ஆறும் இடையினம்எனப்படும்.

உயிர் மெய் எழுத்துக்கள்.புள்ளி பெற்ற எல்லா எழுத்தும் உயிர் எழுத்துக்களோடு கூடிய உயிர் மெய் எழுத்தாகும்.இவ் எழுத்துக்களில் மெய் எழுத்து முன்னும் உயிர் எழுத்து பின்பும் ஒலிப்பைத் தருகின்றன.

மெய்ம்மயக்கம்

பெயர்களும் வழக்கத்தில் ஒரு மெய்யுடன் மற்றொரு மெய் இணைந்து நிற்கும்.ட் ற் ல் ள் என்னும் புள்ளி முன்னர் க ச ப என்ற மூன்று எழுத்துக்கள் மட்டும் வரும்(எ.கா)கற்க,வெல்க,கொள்க என வரும்.

அதே போல் ல ள முன்னர் ய வ தோன்றும்.(எ.கா)கல்வி, கேள்வி மேலும் ங ஞ ண ந ம ன என வரும் புள்ளி முன்னர் அவர் இன எழுத்துக்களான க ச ட த ப ற என்னும் வரும்.

ண ன முன்னர் க ச ஞ ப ம ய வ என்னும் சொற்கள் வந்து புணரும்.ஞ ந ம வ முன் ய் என்ற மெய் வரும்.ம் முன் வ் வரும் ய் ர் ழ் முன் ங் கும் தோன்றும். மெய் எழுத்துக்கள் எல்லாம் தம் முன் நாம் வரின் ர ழ தவிர அதே மெய் மிகும்.(எ.கா) இங்ஙனம், தேர்ச்சி என் வரும்.

சுட்டெழுத்துக்கள் அ இ ஈ மூன்றும் சுட்டு

வினா எழுத்துக்கள் ஆ ஏ ஓ மூன்று வினா

2. மொழி மரபு

மொழி என்பது சொல்.சொல்லில் உள்ள எழுத்துக்களின் இலக்கணத்தைக் கூறுவது மொழிமரபாகும்.

ஒரு சொல் குற்றியலுகரம் நெட்டெழுத்துக்கள் பின்னும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய சொற்களிலும் வல்லின ஒற்றின் மீது ஏறிய குற்றியலுகரம் வரும்.(எ.கா)ஆறு,பாட்டு, மூச்சு,வாத்து,காப்பு,காற்று என வரும்.குற்றெழுத்தின் பின்னரும் ஆய்தப்புள்ளி ஆறு வல்லெழுத்துக்களின் மீது உயிரோடு வரும் எஃகு அஃது என வரும்.

உயிர் அளபெடை.குறுகிய ஓசையுடைய சொற்களில் ஓசையை நிரப்ப நெட்டெழுத்தின் பின்னே அதன் இனமான குறில் நின்று ஓசையை நிறைவு செய்யும்.(எ.கா)ஆடூஉ, தொழாஅர் எனவரும்.அதேபோல் ஐ ஔ ஓசை விளைவிக்க இ உ வரும்.

சொல் வகைகள்.

ஓர் எழுத்துஒருமொழி,ஈர் எழுத்து ஒரு மொழி, இரண்டு எழுத்துக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய சொற்கள் என மூவகைப்படும்.நெட்டெழுத்துக்கள் ஏழும் தனித்து நின்று பொருள் தரும்.

எழுத்துப்போலி.ஒரு எழுத்திற்கு பதில் வேறொரு எழுத்து வருதல் ஐகாரத்திற்குப் பதில் அஇ வரலாம்.(எ.கா)வைரம் -வயிரம் என் வரும் (நூ-54)ஔகாரத்திற்கு பதில் அகர

உகரம் வரும் கௌந்தியடிகள்-கவுந்தியடிகள் எனவரும்.(நூ-55)

மொழி முதல் எழுத்துக்கள்.அ முதல் ஔ வரை உள்ள 12உயிரும் மொழி முதலாக வரும்.(நூ-59-65) உயிர் மெய் இல்லாத மெய் எழுத்துக்கள் மொழி முதலாக வரா.க த ந ப ம ஐந்து எழுத்துக்கள் எல்லா உயிரோடும் சேர்த்து மொழி முதலாக வரும்.சகர கிளவி அ ஐ ஔ என்னும் மூன்று உயிர் தவிர ஏனைய உயிரோடு மொழி முதலில் வரும்.வகர மெய் உ ஊ ஒ ஓ தவிர மற்ற எல்லா உயிரோடும் மொழிமுதலில் வரும். ஆ எ ஒ மூன்று உயிரும் சக்கரத்துடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

மொழி இறுதி எழுத்துக்கள்.ஔ வைத்தவிர ஏனைய உயிர்கள் மொழி இறுதியில் வரும். க வ இரண்டு எழுத்தோடு இணைந்து மொழி இறுதியில் ஔ வரும்.(நூ69,70) எ உயிர் மெய் எழுத்துக்களோடு சேர்ந்து ஈறாகாது.ச கரம் இரு மொழியில் மட்டும் ஈறாக வரும்(எ.கா) உசு,முசு மொழி இறுதியில் வரும் மெய்கள் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள ஆகிய 11எழுத்தும் மொழி இறுதியில் வரும்.(நூ-45)

## 3.பிறப்பியல்

உந்தியிலிருந்து காற்று தோன்றி மேலே வந்து தலை, கழுத்து,நெஞ்சு இவற்றில் நின்று பல்,உதடு,நாக்கு,மூக்கு,அண்ணம், எட்டு உறுப்புகளிலும் தொடர்புற்று எல்லா ஒலி எழுத்துக்களும் தோன்றும்.ஒவ்வொரு வகை எழுத்துக்களும் வெவ்வேறு தன்மையில் தோன்றும்.(நூ-83) உயிர் எழுத்துக்கள் கழுத்திலிருந்து பிறந்த காற்றால் தோன்றும்.அவற்றுள் அஆ வாயைத் திறந்தால் தோன்றும்.(நூ84,85)இ ஈ எ ஏ ஐ என்ற ஐந்தெழுத்தும் அண்பல் முதல் நா விளிம்புகளில் உடைய. உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஐந்தும் இதழ் குவிந்து இயலும் (நூ86-87) கங முதல் நா அண்ணம். சஞ இடை நா அண்ணம்.டண நுனி நா அண்ணம்.றன நுனி நா அண்டத்தை ஒற்ற பிறக்கும்.ரழ நுனி நா அண்ணத்தைத் தடவ பிறக்கும்.இதழ் ஒற்ற நம் பிறக்கும்.பல் இதழை ஒற்ற வ பிறக்கும்.(நூ89-99)

## 4.புணரியல்

சொல்லில் நிற்கும் எழுத்துக்கள் வரும் எழுத்தோடு இணைவதைக் குறிப்பது புணரியலாகும்.

மொழிமுதல் எழுத்துக்கள் 22மொழி இறுதி எழுத்துக்கள் 24 இவற்றில் உயிர் மெய் என்னும் இருவகை எழுத்துக்களே எல்லா சொற்களுக்கும் இறுதியாக வரும் முதலாகவும் வரும்.சொல்லின் இறுதியில் வரும் மெய் எழுத்துக்கள் எல்லாம் புள்ளி பெற்றே வரும்.

சொற்கள் புணரும் நிலை.நின்ற சொல்லின் இறுதியில் வரும் எழுத்தோடுவந்து சேருகின்றன சொற்கள் பெயர்ச்சொல் லோடு பெயர்ச்சொல்லைச்சேர்க்கும் போதும்.பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லைச் சேர்க்கும்போதும் வினைச்சொல்லோடு வினைச்சொல் சேரும் போதும் மூன்று வகை திரிபுகள் ஏற்படலாம் ஒன்று இயல்பாக புணரலாம் இந்த நான்கு நிலைகளில் சொற்களின் சேர்க்கை அமையும் (நூ-108,109)இது மூவகையில் அமையும் மெய் பிரிதாதல்,மிகுதல்,குன்றல் எனப்படும்.

புணர்ச்சியில் வேற்றுமை உருபுகள்: வேற்றுமை உருபுகள் ஐ,ஒடு,கு,இன்,அது,கண் என்னும் ஆறாகும்.(நூ-113)இதில் கு, கண் என்னும் இரண்டு வல்லெழுத்துவேற்றுமை உருபுகள் வரும்போது ஒற்று மிகும் (எ.கா.மணி+கு=மணிக்கு)ஆறன் உருவாகிய அது என் கிளவி அகர ஈற்றுச்சொற்கள் அ வாக் வந்தால் அது உருவில் அ கெட்டு விடும்.(நூ115)

உயர் திணை அஃறிணை எனப்பெயர் இருவகைப்படும் இந்த உயர்திணை அஃறிணை பெயருடன் வேற்றுமை உருபுகள் சேரும்போது சாரியை இடைநிற்கும். சாரியைகள் இன் வற்று,அத்து,ஆம்,ஒன்,ஆன்,அக்கு,இக்கு,அன் என்ற ஒன்பதும் அவை போல பிறவும் வரும்(நூ117-119) என்கிறார்.ஆ முன்னர் இன் சாரியை யின் ககரம் கெடும்.அளவுப் பெயர்களில் இன் ஊற்றாக மாறிவிடும்.சுட்டு முதலாக வரின்வற்று அற்றதாக மாறும்.நான்காம் வேற்றுமை உருபு கு வரும் பொழுது இன் சாரியை யின் உள்ள ன் ற் ஆகத்திரியும்.(நூ-120-125)அம் சாரியை பெற்று வரும்போது வருமொழி முதல் க ச த வந்தால் தம் மெய் திரிந்து ங ஞ ந ஆகும்.

எழுத்துச் சாரியை.காரம்,கரம்,கான் இவை மூன்றும் எழுத்துச் சாரியை ஆகும்.காரமும் கானும் நெட்டெழுத்துச் சாரியை (எ.காஆகாரம்,ஐகான்,) எழுத்துச் சாரியை மூன்றும் குறில் எழுத்துக்களுக்கு வரும்.ஐ ஔ இரண்டும் கான் சாரியை பெற்று வரும்.(நூ-135-137).

## 5.தொகை மரபு

புணர்ச்சி விதிகள் சிலவற்றை தொகுத்துக் கூறுவதால் தொகை மரபு ஆயிற்று.க ச த ப முதலிய எழுத்துக்கள் வந்தால் அதன் இனமான ங ஞ ந ம வரும் இது மொழியின் மரபாகும்.(நூ-143).ஞ ந ம ய வ என்ற சொற்கள் எல்லா மொழிகளிலும் இயல்பாக புணரும்.சில இடங்களில் உறழ்ந்தும் வரும்.ண ன ஈற்றுச் சொற்கள் வேற்றுமை அவ்வழியில் இயல்பாக புணரும்.(நூ-136-138)ல ன புள்ளி முன்னர் த ந வரின் ட ட என வரும்.மெய்யீற்றுச் சொற்களும் உயிரீற்றுச்சொற்களும் வேற்றுமையில் வந்தால் ஒற்றுமிகும் என்று கூறப்பட்டது.எனினும் மூன்றாம் வேற்றுமை உருபு வந்தால் இயல்பாகவும், திரித்தும், உறழ்ந்தும் வரும் என்கிறார்(நூ-156)

இரண்டாம் வேற்றுமை புணர்ச்சி மெல்லெழுத்து மிகுவழி வலிப்போடு தோன்றுதல் வல்லெழுத்து மிகுவழி மெல்லெழுத்து தோன்றலும் இயல்பாய் வருவதிற்கு பதில் ஒற்று மிகுந்து வருதலும் சாரியை உள்வழி சாரியை கெடுதலும் சாரியை உள்வழி தன் உருபு நிலையில் அஃறிணை விரவுப் பெயர்க்கு அவ்வியல் நிலையலும் மெய் பிரிதாகிடத்து இயல்பாக புணர்தல் என்று வரும்.(நூ-157) வேற்றுமை அவ்வழியில் இ ஐ என்னும் சொற்கள் வந்து புணரும் போது இயல்பாகவும், உறழ்ந்தும், வல்லெழுத்து மிகுந்தும் வரும்.

அளவு நிறைப்பெயர்கள்.அளத்தல், நிறுத்தல்,முகத்தல் அளவை பெயர்கள் வரும்போது ஏ சாரியை பெற்று வரும்.(எகா.இரண்டே முக்கால்)அரை என்னும் அளவும் பெயர்க்கு இவ்விதி பொருந்தாது.இயல்பாக புணரும் எனக்குறிப்பிடுகின்றது.(நூ.164-165)

## 6.உருபியல்

வேற்றுமை உருபுகள் பெயர்களோடு சேரும் போது ஏற்படும் புணர்ச்சி விதிகளைப் பற்றி கூறுவது உருபியலாகும்.

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் நிலைமொழி முன்னர் இன் சாரியை பெறும்.பல்லவை முதலிய அகர ஈற்றுப் பெயர் முன் வற்றுச் சாரியை பெற்று வரும்.மரப்பெயர்கள் முன் அத்துச் சாரியை பெற்று வரும்.(நூ-176,185)

எல்லாரும்  என்னும் படர்க்கைச்சொல்லும் எல்லீரும் என்னும் முன்னிலைச் சொல்லும் ஒற்றும் உகரமும் கெடும் நிற்றல் வேண்டும் ர கரப்புள்ளி உம்மை நிலையும் இறுதியான தம் என்ற சொல் படர்க்கைக்கு வரும் நும் என்ற சொல் முன்னிலைக்கு வரும்.எல்லார் நம்மையும் எல்லார் நும்மையும் என் வரும்(நூ191).

பத்து என்ற சொல் முன் ஆன் சாரியை பெற்று வரும்.குற்றியலுகர திசைப்பெயர்கள்புணரும் போது சாரியை பெற்றும் பெறாமலும் வரும்.(நூ199,201)

## 7.உயிர் மயங்கியல்

உயிர் ஈறுகள் முன்வரும் சொற்களோடு புணரும் நிலையைக் கூறும் பகுதியாகும்.

அகர இறுதிப் பெயர் நிலை முன்னர் வேற்றுமை அல்வழி ஆகிய இரண்டு இடங்களிலும் வரும்போது க ச த ப வந்தால் ஒற்றுமிகும்.சுட்டு எழுத்துக்களாகிய அ இ உ முன்னர் ஞ ந ம மெய் தோன்றின் ஒட்டிய ஒற்று இடை மிகும்.(எ.கா அந்நூல்)சுட்டிக் முன் ய வ மெய் தோன்றின் வகர மெய் இடையில் தோன்றும்.உயிர் வந்தாலும் அந்நிலை மாறாது.(நூ205-207).

இயல்பாக முடியும் அகர ஈற்றுச்சொற்கள்.அன்ன என்னும் சொல்லும்.அன்மையில் உள்ளோரை அழைக்கும் சொல்லும்,செய்மன போன்ற வினைமுற்றுச் சொல்லும்,தொழில் செய்ய ஏவுகின்ற வியங்கோள் சொல்லும்,செய்த என்ற பெயரெச்சமும்,செய்யிய என்னும் வினையெச்சம்,அம்ம என்னும் உரைப்பொருள் கிளவி,பல சில போன்ற பலவற்றை குறிக்கும் சொல் ஆகியன இயல்பாகப் புணரும்(நூ-210).வாழிய என்னும் இறுதி கெடுதலும் உரித்தே.உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார் (அம்மா கேள்)என வரும்.

இயல்பாகும் ஆகார ஈற்றுச்சொற்கள்.ஆ ,மாஎன்ற சொற்களும் கண்ணா என்னும் பெயர்ச்சொல் வரும்,யா என்ற வினாச்சொல்லும்,பன்மை உணர்த்தும் உண்ணா போன்ற சொல்லும்,மியா என்னும் உரையசை சொல்லும்,தன் தொழில் உரைக்கும் உண்கா என்ற சொல்லும் இயல் பாகப்புணரும்.(நூ-224)

மரப்பெயர்க்கிளவி இயல்பாக புணரும்.இகர இறுதி வேற்றுமை யாக வரின் வல்லெழுத்து மிகும்.(நூ.235).ஈகார இறுதி ஆகார ஈறு புணர்தல் போல வரும்.

ஔகார என்றும் பெயர்கள் அல்வழிப்புணர்ச்சியிலும் வேற்றுமை புணர்ச்சியிலும் வல்லெழுத்து மிக்கு முடியும் உகரம் வருதல் சிறப்பு என இலக்கணத்தில் சிறந்தவர் கூறுவர்.(எ.கா கௌ+கடிது=கௌ+உ+கடிது-கௌவு+க்+கடிது=கௌவுக்கடிது என் வரும்...(நூ-295)

## 8.புள்ளி மயங்கியல்

மெய் ஈறுகள் வருமொழியோடு சேரும் போது ஏற்படும் மாற்றங்கள் பற்றி குறிப்பிடுவது.

ஞகார ஈறு தொழிற்பெயர் முன்னர் வேற்றுமை அல்வழி இரு வழியிலும் வரு மொழியில்வல்லெழுத்து வரின் வல்லெழுத்து மிகும்.உகரம் வருதல் ஆவயினான.(எ.கா-உரிஞ்+கடிது=உரிஞுக்கடிது)நூ-296.

எல்லாம் என்னும் விரவுப்பெயர் உருபியலில் கூறப்பட்டதைப்போன்று வற்றுசாரியை பெற்று வரும்.அல்வழியில் சாரியை நிலை பெறாது. எ.கா எல்லாம்+கொம்பும்=எல்லாவற்றுக்கொம்பும்,எல்லாம்+கடையும்=எல்லாக் கடையும் என வரும்.

தேன் என்னும் சொல் வல்லெழுத்து வரின் திரித்தும் இயல்பாகவும் புணரும் வல்லெழுத்து மிகுவழி இறுதி மெய் இருக்காது.(எ.கா)தேன்+குடம்=தேன் குடம் என வரும்.தேன்+குடம்=தேன் குடம்,தேக்குடம் என் வரும்.மெல்லெழுத்தது மிகினும் மாற்றமில்லை தேங்குடம் எனவும் வரும்.

இயற்பெயர் முன் தந்தை வரின்முதற்கண் மெய்க்கெட அகரம் நிலையும் மெய் ஒழிந்து அன் கெடும்.எ.கா சாத்தன்+தந்தை இறுதி அன் கெட சாத்த்+தந்தை என்றானது. இறுதி மெய் ஒழிந்து சாத்+தந்தை=சாத்தந்தை என்றானது.

லகர மெய் முன் த வரின் அது ஆய்த மாகப் புணரும் கல்+தீது=கஃறீது என் வரும்.நெல்,செல்,சொல்,கொல் என்னும் சொற்கள் வந்து புணரும் போது வேறீறுமை போல் ற கரம் வந்து புணரும்.எ.கா நெல்+குவிந்தது=நெற்குவிந்தது (நூ-369-372)

எண்ணுப்பெயர்.எண்ணுப் பெயர் ஏழ் என்னும் சொல் முன்னர் உருபியலில் கூறப்பட்டதைப்போன்று அன் சாரியை பெற்று வரும்.எ.கா ஏழ்+கணக்கு,ஏழ்+அன்+கணக்கு, ஏழன்+கணக்கு=ஏழன்கணக்கு எனவரும்.அளவு நிறைப் பெயர்களில் முதல் எழுத்து குறுகி ழகர ஒற்றுடன் உகரம் நிலையும் எ.கா ஏழ்+கழஞ்சு =எழ்+கழஞ்சு,எழ்+உ+கழஞ்சு=எழு கழஞ்சு என வரும்.(நூ-388-390)

ளகர ஈற்றுத் தொழிற் பெயர் ஏனைய தொழிற் பெயர் போல் ஞகர ஈறு போல உகரம் பெற்று வல்லெழுத்து மிக்கு முடியும்.எ.கா வள்+கடிது,வள்+உ+க்+கடிது=வள்ளுக்கடிது என் வரும்.(நூ-401)அதே போல் மக்கள் என்னும் சொல் வருமொழி வந்து புணரும் நிலைக்கேற்ப புணரும்.எ.கா மக்கள்+பேறு=மக்கட்பேறு என் வரும்.

## 9.குற்றியலுகரப்புணரியல்

குற்றியலுகர வகையும் பெயரும்.

1.ஈரெழுத்து ஒருமொழி-காசு

2.உயிர்த்தொடர்-வரகு

3.இடைத்தொடர்-நல்கு

4.ஆய்தத்தொடர்-எஃகு

5.வன்தொடர்-கொக்கு

6.மென்தொடர்-குரங்கு,என் ஆறு இடங்களில் உகரம் குறுக்கும்(நூ-406)

வன் தொடர் மென்தொடர் குற்றியலுகரத்திற்கு ஒற்று மிகுந்து வரும்.நின்ற சொல்லிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகும்.அல்லது கிளை ஒற்றாகும்.எ.கா எண்கு+குட்டி=எட்டுக்குட்டி என் வரும்.(நூ-414)

மரப்பெயர் கிளவி அம் சாரியை பெற்று வரும்.சில மெல்லெழுத்து பெற்று முடியும்.(நூ-415-416)

யாது என்ற வினாச்சொல்லும் சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும் உருசியாவில் சொல்லப்பட்ட அன் சாரியை பெற்று வரும்.(நூ-422)

திசைப்பெயர் முன் திசைப்பெயர் புணர்ந்தால்ஒற்று உகரத்துடன் கெடும்.தெற்கு என்ற திசைப்பெயர் முன் புணர்ந்தால் மட்டும் ஒற்று மெய் திரிந்து ன கரமாகும்.எ.கா வடக்கு+கிழக்கு=வடகிழக்கு ,தெற்கு+கிழக்கு=தென்கிழக்கு என் வரும்(.நூ-432)

ஒன்று முதல் எட்டு வரையுள்ள எல்லா எண்களும் பத்து முன்வரின் குற்றியலுகரம் முற்றோடு கெடும் இரண்டு என்ற எண்ணைத் தவிர பத்து+ஒன்று=பதின் ஒன்று என வரும்.(நூ-433) மேலும் பத்து முன் எண்கள் புணரும் நிலை ஆகியன கூறப்பட்டன.

உயிரும் மெய்யும் இறுதியாக வரும் குறிப்பு,பண்பு,இசைக்குறைச் சொற்களுக்கும் பண்புத்தொகைக்களுக்கும்,வினைத்தொகை களுக்கும்,எண்ணின் தொகுதி களுக்கும், புணர்ச்சி இலக்கணங்கள் வெளிப்படத்தெரியா,உலகில் மருவி நடக்கும் வழக்கத்தன.அதனால் அவற்றை இலக்கண வகையால் கொள்ளாமல் மருவின் வகையால் கொள்ள வேண்டும் என்கிறார்.